ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1838/56 - 2013 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2013.11.29

*1838/56 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**துணை விதிகள்**

பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சர் மற்றும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி,*
*2013, மே 15.*

**வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்**

1. இந்தத் துணை விதிகள் பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது, கட்டுப்படுத்துவது, நெறிப்படுத்துவது, கட்டணங்களை அறவிடுவது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் மூலம் அனுமதிக்கப்பட்டு, தலைவரினால் அறிவிக்கப்பட்டு இங்கு முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள இடங்கள் தவிர, வேறு எந்த இடங்களிலும் வாடகைக்காக ஓடும் நோக்கத்துடன் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. சபையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் இடங்களை மாற்றியமைக்கவோ, புதிய இடங்களைப் பெயரிடவோ முடியும்.



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3. பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இரண்டாவது துணை விதிக்கமைய முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தையும், அதற்குரிய அரச கட்டணங்களையும் சபையிடம் மாதாந்தம் செலுத்திய பின்னர் உரிய இடங்களில் வாடகை வாகனங்களை நிறுத்தி வைத்தல் வேண்டும். அந்த வாடகை வாகனங்கள் சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். கட்டணங்கள் காலத்துக்குக் காலம் சபையின் மூலம் தீர்மானம் செய்யப்பட முடியும். கட்டணத் திருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் நடைமுறைக்கு வரும்.*

*4. பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரேனும் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள, இங்கு முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கூடாது. இந்த நடைமுறை முற்பகல் 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை செயற்படுத்தப்படும்.*

*5. இந்தத் துணை விதிகளின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப் பத்திரமும் தலைவரால் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அதன் செல்லுபடிக் காலம் அது வழங்கப்பட்ட உரிய பஞ்சாங்க வருடத்தின் கடைசித் திகதியுடன் முடிவடையும்.*

*6. அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெறுவதற்காக சபை விநியோகிக்கும் மூன்றாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறான விண்ணப்பப் படிவத்தை உரிமையாளர் அல்லது சாரதி சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.*

*7. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஒரு வாகனம் தொடர்பான அனுமதிப் பத்திரத்தைக் காட்டும் வண்ணம் உரிமையாளரிடமோ அல்லது சாரதியிடமோ வாகனக் கட்டுப்பாட்டாளர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் வேண்டிக் கொள்ளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அதனைப் பரிசீலிப்பதற்காக அவர் முன்வைத்தல் வேண்டும்.*

*8. ஒவ்வொரு வருடத்தினதும் மாதத்தின் 31ஆம் திகதிக்கு முன்னர் உரிய வருடத்துக்கான வாகனம் நிறுத்தி வைப்பதற்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*9. பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் மூலம் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி எந்தவொரு வாகனத்தையும் வாகனத் தரிப்பிடத்தில் நுழைத்தல் கூடாது.*

*10. நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வாகனத் தரிப்பிடமொன்றில் இருந்து வாகனத்தை 14 நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு அகற்றிக்கொள்ள நேர்ந்தால் அது பற்றி சபையிடம் தெரிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல் ஏதும் செயற்படாதவிடத்து, உரிய வருடத்துக்கான கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.*

*11. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் எந்தவொரு வாகனத்தையும் திருத்தம் செய்வதோ, கழுவுவதோ அல்லது கழுவச் செய்வதோ கூடாது.*

*12. வாடகை வாகனத் தரிப்பிடமொன்றில் அல்லது வாகனம் ஒன்றினுள் எவரேனும் குடிபோதையிலோ, தகாத முறையிலோ அல்லது ஏனையோருக்கு இடையூறு ஏற்படும் விதத்திலோ நடந்து கொள்வதோ கூடாது.*

*13. இந்தத் துணை விதிகளின் எந்தவொரு ஏற்பாட்டையும் மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதிகாரம் கொண்ட நீதிமன்றம் இதனைக் குற்றமாகக் கருதி விதிக்கும் உச்ச அளவுத் தண்டனைக்கு உட்படுதல் வேண்டும். மேலும் இந்த மீறல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டால், அல்லது இது பற்றிய கவனத்தை ஈர்த்துத் தலைவரது அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரது எழுத்துமூல அறிவித்தலைப் பெற்ற பின்னரும் மீறப்பட்டால் அவ்வாறு மீறப்படும் ஒவ்வொரு நாளுக்கும் என விதிக்கப்படும் மேலதிகத் தண்டத்துக்கும் 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 122 ஆவது பிரிவின் 2 ஆவது உப பிரிவின்படி உட்படுதல் வேண்டும்.*

*14. உரிய அதிகாரங்களைக் கொண்டுள்ள நீதிமன்றம் விதிக்கும் வேறு ஏதும் தண்டத்துக்கு மேலதிகமாக இந்தத் துணை விதிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் மீறிய குற்றத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரது பதிவு இரத்துச் செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும். மேலும், அவ்வாறு இரத்துச் செய்வது தொடர்பாக எந்தவித நட்டஈட்டையும் பெற அவருக்கு உரித்து இல்லை.*

*15. பதங்கள் பற்றிய தெளிவு தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில் "சபை" என்பது பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையையும்,*

*"தலைவர்" என்பது பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் தலைவரையும்,*

*"அதிகாரம் பெற்ற அலுவலர்" என்பது பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரையும்,*

*"வாகனக் கட்டுப்பாட்டாளர்" என்பது பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபை நியமித்துள்ள வாகனங்களைக் கட்டுப்படுத்தும் அலுவலரையும்,*

"மோட்டார் வாகனம் அல்லது வாடகை வாகனம்" என்பது முச்சக்கர வண்டியையோ, லொறி வண்டியையோ, ட்ராக் வண்டியையோ, மோட்டார் வானையோ, திராக்டரையோ, மோட்டார் காரையோ, கை திராக்டரையோ குறிக்கும்.

இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

***அட்டவணை - 01***

*பாத்த ஹேவாஹெட்ட பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள இடங்கள்*

1. அம்பிட்டிய - தலாத்துஓய பாதையில் தலாத்துஓய பஸ் தரிப்பிடத்தின் எதிரில் வலது புறமாக 100 அடி நீளமான இடம்.
2. தலாத்துஓய - குறுதெனிய பாதையில் பிரதேச செயலக நுழைவாயிலிலிருந்து தலாத்துஓய நகரம் நோக்கிய 75 அடி நீளமான இடம்.
3. தலாத்துஓய மாரஸ்ஸன பாதையில் தலாத்துஓய மாரஸ்ஸன பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எதிரில் இடது புறமாக 150 அடி நீளமான இடம்.
4. தலாத்துஓய போதிய எதிரில் பிரதான வீதியிலிருந்து பின்னகொல்ல பாதையில் 75 அடி நீளமான இடம்.
5. தலாத்துஓய மாரஸ்ஸன வீதியில் முதுனகடைச் சந்தியில் பிரதேச சபை உப அலுவலக நுழைவாயிலிலிருந்து எதிரே 50 அடி நீளமான இடம்.
6. தலாத்துஓய மாரஸ்ஸன வீதியில் பவ்லான பாதையின் ஆரம்பச் சந்தியில் வலதுபுறமாக 50 அடி நீளமான இடம்.
7. தலாத்துஓய கந்தசந்திய வீதியில் ரஜமாவத்த எதிர்ப்படும் கிவுல் லிந்த சந்தியின் வலது புறமாக 50 அடி நீளமான இடம்.
8. தலாத்துஓய மாரஸ்ஸன வீதியில் வெல்கம்மெத்த சந்தியின் வலது புறமாக 50 அடி நீளமான இடம்.
9. மாரஸ்ஸன பிரதான வீதியில் கந்தேவெல பாதையின் ஆரம்பச் சந்தியிலிருந்து இடது புறமாக 60 அடி நீளமான இடம்.
10. மாரஸ்ஸன அம்பலத்தின் எதிரில் 50 அடி நீளமான இடம்.
11. மாரஸ்ஸன பஸ்கம சந்தி 50 அடி முன்னோக்கிய இடம்.
12. மாரஸ்ஸன - பஸ்கம வீதியில் இடது புறம் ஹேவாவிஸ்ஸ கொன்னகஹமுல விளையாட்டரங்கு எதிரில் 60 அடி நீளமான இடம்.
13. மாரஸ்ஸன-பஸ்கம வீதியில் இடதுபுறம் பவ்லான சந்தியிலிருந்து மாரஸ்ஸன நோக்கிய 60 அடி நீளமான இடம்.
14. பஸ்கம சந்தியில் நாத்த தேவாலய நுழைவாயிலிலிருந்து மாரஸ்ஸன நோக்கிய 75 அடி நீளமான இடம்.
15. மாரஸ்ஸன நகரில் கமநல கேந்திரத்தின் நுழைவாயிலிலிருந்து முன்னோக்கிய 100 அடி நீளமான இடம்.
16. மாரஸ்ஸன - கொலபிஸ்ஸ வீதியில் கந்தசந்தி மொரகஹமுல சந்தியின் வலதுபுறம் 75 அடி நீளமான இடம்.
17. கந்தசந்திய கொலபிஸ்ஸ வீதியில் உடுதெனிய முஸ்லிம் வித்தியாலய நுழைவுச் சந்தியில் வலதுபுறம் 30 அடி நீளமான இடம்.
18. கந்தசந்திய கொலபிஸ்ஸ வீதியில் இடதுபுறம் தெஹல்கட சந்தியிலிருந்து எதிர்நோக்கிய 50 அடி நீளமான இடம்.
19. தெஹல்கட கஹம்பிலியாவ வீதியின் ஆரம்பத்திலிருந்து இடதுபுறம் 60 அடி நீளமான இடம்.
20. கந்தசந்திய கொலபிஸ்ஸ பாதையில் பொத்கொட சந்தி இடதுபுறம் விசாகா வர்த்தக நிலையத்தின் எதிரில் 75 அடி நீளமான இடம்
21. கந்தசந்திய கொலபிஸ்ஸ வீதியில் நீலவல சந்தியின் இடதுபுறம் 50 அடி நீளமான இடம்.
22. கந்தசந்திய கொலபிஸ்ஸ வீதியில் காவலரண் சந்தியில் வலதுபுறம் 100 அடி நீளமான இடம்.
23. கொலபிஸ்ஸ சந்தியின் பஸ் தரிப்பிடத்தின் எதிரில் 75 அடி நீளமான இடம்.
24. கொலபிஸ்ஸ - தெல்தோட்டை வீதியில் எனசல்கொல்ல வித்தியாலய சந்தியின் இடதுபுறம் 100 அடி நீளமான இடம்.
25. உடுதெனிய - போபிடிய சந்தியின் எதிரில் 100 அடி நீளமான இடம்.
26. உடுதெனிய பிரதான பாதையின் தெஹல்கட வீதியின் திருப்பத்தில் இருந்து தெஹல்கட நோக்கிய 30 அடி நீளமான இடம்.
27. மயிலபிட்டிய கல்லிந்த சந்திப் பழைய பாதையின் அருகிலிருந்து நகரை நோக்கிய 150 அடி நீளமான இடம்.
28. மயிலபிட்டிய மகா வித்தியாலய நுழைவாயில் பாதையிலிருந்து நகரை நோக்கிய 50 அடி நீளமான இடம்.
29. மயிலபிட்டிய - கிவுலதன்ன சந்தியிலிருந்து பஸ் தரிப்பிடம் வரையுள்ள 50 நீளமான இடம்.
30. மயிலபிட்டிய - ஹங்குரன்கெத்த வீதியில் அம்பவத்த பாதையின் ஆரம்பத்திலிருந்து முன்னோக்கிய 30 அடி நீளமான இடம்.
31. கந்தசந்திய அதிகாரிகம சந்தியின் வட்டவளைவு மைல்கல்லிலிருந்து ஹங்குரன்கெத்த நோக்கிய 100 அடி நீளமான இடம்.
32. கந்த சந்தி - அதிஹாரகம வீதியில் வலதுபுறம் பள்ளே மாஓயா பாலத்திலிருந்து கந்தசந்திய நோக்கிய 60 அடி நீளமான இடம்.
33. ஹங்குரன்கெத்த பிரதான வீதியிலிருந்து கந்த சந்தி - மாரஸ்ஸன வீதியின் ஆரம்பத்தில் இடதுபுறம் 150 அடி நீளமான இடம்.
34. கந்தசந்திய ஹங்குரன்கெத்த வீதியில் இடதுபுறம் மாஓயா பாலத்திலிருந்து கந்தசந்திய நோக்கிய 30 அடி நீளமான இடம்.
35. கந்தசந்திய ஹங்குரன்கெத்த வீதியில் இடதுபுறம் உணுவின்ன மயானம் அருகிலுள்ள பஸ் தரிப்பிலிருந்து எதிர்நோக்கிய 50 அடி நீளமான இடம்.

36. பவ்லான பஸ் தரிப்பிடத்தின் எதிரில் 50 அடி நீளமான இடம்.
37. தலாத்துஓய மொரகொல்ல வீதியில் அங்கெலிபிட்டிய சந்தியின் வலதுபுற மடித்த பாதையின் ஆரம்பத்திலிருந்து தலாத்துஓயா நோக்கிய 75 அடி நீளமான இடம்.
38. தலாத்துஓயா மொரகொல்ல வீதியில் மகாவங்குவ புத்தர் சிலை அருகிலிருந்து முன்னோக்கிய 60 அடி நீளமான இடம்.
39. தலாத்துஓய - மொரகொல்ல வீதியில் மொரகொல்ல சந்தி இடதுபுற மதகிலிருந்து முன்னோக்கிய 120 அடி நீளமான இடம்.
40. மொரகொல்ல பெல்வூட் சந்தி கிரிமெட்டிய இடைப்பாதையின் ஆரம்பத்திலிருந்து கலஹா நோக்கிய 100 அடி நீளமான இடம்.
41. கண்டி கலஹா பிரதான வீதியின் இடதுபுறம் பெல்வூட் பாதையின் ஆரம்பம் முதல் கலஹா நோக்கிய 30 அடி நீளமான இடம்.
42. கண்டி- கலஹா வீதியில் வலதுபுறம் கலஹா அன்னாசிவத்த பாதையிலிருந்து பிரதேச சபை நூலகத்தின் எதிரில் 50 அடி நீளமான இடம்.
43. கலஹா - புப்புரஸ்ஸ வீதி.
44. கலஹா பிரதான வீதியில் ஆறேக்கர் பாதையின் ஆரம்பத்திலிருந்து தெல்தோட்டை நோக்கிய 150 அடி நீளமான இடம்.
45. கலஹா - தெல்தோட்டை வீதியில் இடதுபுறம் இலங்கை வங்கியின் எதிரில் 40 அடி நீளமான இடம்.
46. தெல்தோட்டை - ஹேவாஹெற்ற வீதி கபடாகம சந்தியிலிருந்து நகரை நோக்கிய 50 அடி நீளமான இடம்.
47. தெல்தோட்டை - கலஹா வீதியின் ஹேவாஹெற்ற சந்தியிலிருந்து நகரை நோக்கிய இடதுபுறம் 75 அடி நீளமான இடம்.
48. தெல்தோட்டை பிரதான வீதி பிரதேச சபை பொதுச்சந்தையின் நுழைவாயிலின் பாதையிலிருந்து கரகஸ்கட வித்தியாலயம் நோக்கிய 100 அடி நீளமான இடம்.
49. தெல்தோட்டை - போபிட்டிய வீதியில் கரகஸ்கட வித்தியாலய நுழைவாயிலிலிருந்து நகரை நோக்கிய 75 அடி நீளமான இடம்.
50. வத்துலியத்த வெவேகடை வீதியின் ஆரம்பச் சந்தியிலிருந்து கால்தன்ன நோக்கிய வலதுபுறம் 50 அடி நீளமான இடம்.
51. கால்தன்ன வீதி போகஹலந்த சந்தியின் இடதுபுறம் 50 அடி நீளமான இடம்.
52. மொரகொல்ல மருத்துவ மனை எதிரில் பஸ் தரிப்பிடம்.
53. கால்தன்ன வீதி தலபிட்டிய சந்தியின் இடதுபுறம் 50 அடி நீளமான இடம்.
54. கால்தென்ன கொவென எதிரில் பிரதேச சபை மாவத்தையின் வலதுபுறம் 50 அடி நீளமான இடம்.
55. கால்தன்ன பாதையின் லுணுவல்ல சந்தியின் இடதுபுறம் 100 அடி நீளமான இடம்.
56. ரட்டேமுல்ல கிராமிய வங்கி எதிரில் இடதுபுறம் 50 அடி நீளமான இடம்.
57. வல்தம்பல சந்தியில் எத்துல்கம நோக்கிய இடதுபுறம் 100 அடி நீளமான இடம்.
58. பூலியத்த சந்தியிலிருந்து அத்துல்கம நோக்கிய இடதுபுறம் 100 அடி நீளமான இடம்.
59. கொட்டபோகல சந்தியிலிருந்து ரட்டேமுல்ல நோக்கிய இடதுபுறம் 150 அடி நீளமான இடம்.
60. அத்துல்கம மஹகடே எதிரில் ரட்டேமுல்ல நோக்கிய இடதுபுறம் 50 அடி நீளமான இடம்.
61. எலமல்தெனிய சந்தியிலிருந்து அங்கெலிபிட்டிய நோக்கிய 100 அடி நீளமான இடம்.
62. பனன்வல சந்தியிலிருந்து அங்கெலிபிட்டிய நோக்கிய 100 அடி நீளமான இடம்.
63. நஹினிவெல பாலத்தின் அருகிலிருந்து கண்டி நோக்கிய 50 மீற்றர் தூரம்.

**அட்டவணை - 02**

வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான மாதாந்தக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| 1. | முச்சக்கர வண்டி ஒன்றுக்கான கட்டணம் | மாதாந்தம் ரூபா | 150.00 |
| 2. | மோட்டார் கார் ஒன்றுக்கான கட்டணம் | மாதாந்தம் ரூபா | 300.00 |
| 3. | மோட்டார் வான் ஒன்றுக்கான கட்டணம் | மாதாந்தம் ரூபா | 300.00 |
| 4. | லொறி ஒன்றுக்கான கட்டணம் | மாதாந்தம் ரூபா | 500.00 |
| 5. | பஸ் வண்டி ஒன்றுக்கான கட்டணம் | மாதாந்தம் ரூபா | 500.00 |
| 6. | ஏனைய கனரக வாகனத்துக்கான கட்டணம் | மாதாந்தம் ரூபா | 550.00 |

**அட்டவணை - 03**

*அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப்படிவம்*

1. வாகன வகையும் இலக்கமும் :----.
2. உரிமையாளரது பெயரும் தேசிய அடையாள அட்டை இலக்கமும் :----.
3. உரிமையாளரது முகவரி :----.
4. சாரதியின் பெயர் :----.
5. சாரதியின் ஆள்அடையாள அட்டை இலக்கம் :----.
6. சாரதியின் அனுமதிப்பத்திர இலக்கம் :----.
7. சாரதியின் முகவரி :----.
8. வாகனத்தை நிறுத்த உத்தேசித்துள்ள தரிப்பிடம் :----.
9. வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கம் :----.
10. அதன் கொள்ளளவும் நிறையும் :----.

மேற்காட்டிய தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

........................................ ................................................................

திகதி விண்ணப்பதாரியின் / சாரதியின் கையொப்பம்.

வருமானப் பரிசோதகரது அறிக்கை

1. தரிப்பிடம் பற்றிய விபரம் :----.
2. அனுமதிப் பத்திரக் கட்டணம் :----.
3. ................. வருடத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை :----.

.........................................

வருமானப் பரிசோதகரது கையொப்பம்.

தலைவரது அங்கீகாரம் :

ரூ. ........................................ இற்கான கட்டணமொன்றை அறவிட்டபின் அனுமதிப்பத்திரத்தை வழங்க அங்கீகாரம் வழங்குகின்றேன்/வழங்கவில்லை.

.........................................

தலைவர்,
பாத்தஹேவாஹெற்ற
பிரதேச சபை.

12- 614/1

**துணை விதிகள்**

பாத்த ஹேவாஹெற்ற பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது வகுதியின் (VII) உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது வகுதியின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் பாத்த ஹேவாஹெற்ற பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சர் மற்றும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*மத்திய மாகாண மாகாண சபை,*
*கண்டி,*
*2013, மே 15.*

**பாத்த ஹேவாஹெற்ற பிரதேச சபை**

*பீடைதரும் வியாபார முயற்சிகள்/அபாயகரமான வியாபார முயற்சிகள், பீடைதரும் மற்றும் அபாயகரமான வியாபார முயற்சிகள் பற்றிய துணை விதிகள்*

*1. இந்த துணைவிதிகள் ஹேவாஹெற்ற பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பீடைதரும் வியாபார முயற்சிகள்/அபாயகரமான வியாபார முயற்சிகள் மற்றும் அபாயகரமான வியாபார முயற்சிகளை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் என்பவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.*

*2. பிரதேச சபையின் தலைவரால் இதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீதல்லாது எந்தவொரு நபரும் பிரதேச சபை எல்லைக்குள் முதலாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பீடைதரும் வியாபார முயற்சிகள் அல்லது அபாயகரமான வியாபார முயற்சிகள் அல்லது பீடை தரும் அபாயகரமான வியாபார முயற்சிகளை நடத்திச் செல்லல் கூடாது.*

*3. ஏற்கனவே இரத்துச செய்யப்பட்டாலன்றி அவ்வாறான ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் அது எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ குறித்த அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.*

*4. வியாபார முயற்சியின் சுற்றுச் சூழலிலும், குறித்த கருமத்துக்கெனப் பயன்படுத்தப்படும் கட்டடம் ஏதும் இருப்பின் அந்தக் கட்டடத்திலும், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையாத எந்தவொரு நபரும் பீடைதரும் வியாபார முயற்சி அல்லது அபாயகரமான வியாபார முயற்சி மற்றும் பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சியொன்றை நடத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.*

*(அ) வளவு நல்ல மறுசீரமைப்புச் செய்த நிலையிலும், நல்ல காற்றோட்ட வசதியுடன் வெளிச்சம் பெறும் வகையிலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையைத் திறந்ததும் அதன் தரையளவின் பதினைந்தில் ஒரு பகுதிக்குக் குறையாத அளவில் யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;*

*(ஆ) ஒவ்வொரு அறையினதும் சுவர்களில் எல்லாப் பகுதிகளிலும் உயரம் 2.14 மீற்றருக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். செங்கல், கருங்கல், கபொக் கல் அல்லது சீமெந்துக்கல் போன்றவற்றினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். சுவர்களின் உட்பகுதி தரைமட்டத்திலிருந்து குறைந்தது 2 மீற்றர் உயரத்துக்குச் சீமெந்துச் சுதை பூசப்பட்டு எஞ்சிய பகுதியில் சுண்ணாம்புச்சுதை தடவப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;*

(இ) ஒவ்வொரு கூரையின் மூலையும் தரைமட்டத்திலிருந்து 2 மீற்றரைவிடக் கூடிய உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) மேற்கூரை ஏதும் நிலையான பொருளைக் கொண்டு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்;

(உ) அரிமரங்கள் அனைத்தின் மீதும் எண்ணெய்ச் சாயம் அல்லது சுண்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) முழுத் தரையும் சீமெந்தினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(எ) வளவு போதியளவு நீர் வடிந்தோடும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) வளவு சுகநலக்குப்பைத்தொட்டிகளுடனும்போதுமான அளவில்மலகூட வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருத்தல்வேண்டும்;

5. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் தமது வியாபார முயற்சியைத் தொடருவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் துர்நாற்றம் வராது அல்லது ஏனைய பீடைகள் உண்டாகாதவாறு களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் பீடைகளை ஏற்படுத்தும் அல்லது துர்நாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படும் பொருட்களைப் பொது இடங்களிலோ அல்லது வீதிகளிலோ கொண்டு செல்லும்போது பீடைகள் ஏற்படாதவாறு மூடி மறைத்து, உறிஞ்செடுக்க முடியாத கொள்கலன்களில் இட்டு எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

7. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் உற்பத்திச் செயன்முறையின்போது வெளியேற்றப்படும் பீடைதரும் ஆவி அல்லது வாயு அங்கு பரவிச் செல்லும்போது பாதிப்பையோ அல்லது பீடையையோ ஏற்படுத்தாத வகையில் அவற்றை உயரத்தில் வளிமண்டலத்தில் விடுவித்தல் வேண்டும். அல்லது தீயினாலோ உருகக்கூடிய உபகரணத்தினாலோ அவற்றை அகற்றுதல் வேண்டும்.

8. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச்செல்லும் வளவுக்குள் போதியளவு வடிகான்களை அமைத்து, அவற்றை நன்கு பராமரித்தும் நாளாந்தம் கழுவியும் வருதல் வேண்டும்.

9. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் மனைத்தளத்தை உறுதியான பொருளினால் நிர்மாணித்தல் வேண்டும். மேலும் நல்ல மறுசீரமைப்புச் செய்தும் பராமரிப்புச் செய்தும் நாளாந்தம் சுத்தம் செய்தும் வருதல் வேண்டும்.

10. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் காலத்துக்குள் வருடாந்தம் வளவுக்கு வெள்ளையடித்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியின்போது பயன்படுத்தும் பாத்திரங்கள், கருவிகள் போன்ற அனைத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் கழிவுப்பொருட்கள், கூட்டிப் பெருக்கும் துகள்கள், குப்பைகள் என்பவற்றுடன் வெளியேற்றப்பட்ட பொருட்கள், துணை உற்பத்திகள் என்பவற்றை உடனடியாகத் தமது தொழில் முயற்சியில் ஈடுபடுத்துவதில்லையெனில், அவற்றை மூடப்பட்ட பாத்திரங்களில் இட்டுப் பிரதேச சபை நியதிக்கமைய நாளாந்தம் வெளியேற்றுதல் வேண்டும்.

13. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தோல் அல்லது ஏனைய பொருட்களைக் கழுவ அல்லது ஊறவைக்கப் பயன்படுத்தும் தாங்கியிலிருந்து துர்நாற்றம் வீசுவதைத் தவிர்ப்பதற்காகத் தேவைக்கேற்றவாறு அவற்றை வெளியேற்றிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் ஆற்றிலோ அல்லது தண்ணீர் செல்லும் வழியிலோ, நீரோடையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ அல்லது ஒரு வடிகானிலோ ஏதும் அழுக்கான துர்நாற்றம் வீசும் அல்லது பீடைதரும் தண்ணீரையோ அல்லது திரவத்தையோ அனுப்புவதும் வடியச்செய்வதும் அல்லது பீடைதரும் திரவத்தின் மூலம் கழுவுவதும் அல்லது வேறு வழிகளில் ஆற்றிலோ தண்ணீர் வடிந்தோடும் வழியிலோ, நீர்நிலையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ, வடிகானிலோ அல்லது திறந்த நீர்ப்பிரதேசத்திலோ இட்டு அசுத்தமடையச் செய்தல் கூடாது.

15. தலைவர் அல்லது அந்தக் காரியத்தைச் செய்யப் பொதுவாகவோ விசேடமாகவோ அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலரால் கடமை நேரத்தில் பீடைதரும் தொழில் முயற்சி அல்லது அபாயகரமான தொழில்முயற்சி அல்லது அபாயகரமான பீடைதரும் தொழில்முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் பிரவேசித்துப் பரீட்சித்துப் பார்ப்பது சட்டபூர்வமானதாக அமையும். மேலும் அனுமதிப்பத்திரதாரி அல்லது அவரது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருப்பவர் அவ்வாறான பரிசீலனைக்கு இடமளித்தல் வேண்டும்.

16. அனுமதிப்பத்திரத்துக்குரிய வளவொன்று இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கவில்லையெனப் பரிசீலனையின்போது காணப்படும் சந்தர்ப்பங்களில் உரிய வளவு இந்தத் துணைவிதிகளுக்கு அமைவானதாக ஆக்கப்படுவதற்குச் செய்யப்படவேண்டியவற்றை உரிய காலத்துக்குள் மேற்கொள்ள வேண்டுமென அனுமதிப்பத்திரதாரிக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றை வழங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. மேலும், குறித்த அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரதாரி செயற்படுதல் வேண்டும். அவ்வாறு செயற்படாதவிடத்து, அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த அனுமதிப்பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக ஆக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

17. இந்த துணைவிதிகளின் கீழ் ஏதேனுமொரு தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கெனத் தம்மிடம் ஒருவர் முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தை அது கிடைத்த 30 நாட்களுக்குள் குறித்த வளவு இந்தத் துணை விதிகளுக்கு அமைவாக உள்ளதெனின், அனுமதிப்பத்திரத்தை வழங்குவதும், அல்லது நிராகரிப்பதெனின் அதற்கான காரணத்தை விண்ணப்பதாரிக்கு அறிவிப்பதும் தலைவரது கருமமாகும்.

18. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது அனுமதிப்பத்திரத்தையும் அனுமதிப்பத்திரத்துக்குரிய கைத்தொழிலிலோ அல்லது தொழிலிலோ ஈடுபட்டுள்ள ஊழியர்களது பெயர், முகவரிகளைச் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் காட்டும் பட்டியலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நிலையத்தில் பகிரங்கமாகத் தெரியும் வண்ணம் தொங்கவைத்தல் வேண்டும்.

19. இந்தத் துணைவிதிகளின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு அறிவித்தலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உரிமையாளர் அல்து அந்த நிலையத்தின் பொறுப்பாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஒருவர் இல்லாத பட்சத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தில் பகிரங்கமாகத் தென்படும்படி தொங்கவிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான அறிவித்தலொன்றில் நிலையத்தின் உரிமையாளர் அல்லது அங்கு செயற்படுவோரது பெயர் குறிப்பிடப்படுவது தேவையற்றதாகும்.

20. பிரதேச சபை சட்டத்தின் 164 வது வகுதியின் கீழ் அனுமதிப்பத்திரம் தேவைப்படும் கைத்தொழில் அல்லது தொழில் முயற்சிகள் சில ஒரே இடத்தில் நடத்திச் செல்லப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு தனித்தனியாக ஒவ்வொரு கைத்தொழில் முயற்சிக்குமெனச் செலுத்தப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம், குறித்த கைத்தொழில் அல்லது தொழில் முயற்சிக்கெனப் பயன்படுத்தும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் தனித்தனியாக அறவிடப்படுதல் வேண்டும்.

21. இந்த துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 126 ஆம் அதிகாரத்தின் (2) ஆவது உப பிரிவில் தரப்பட்டுள்ளவாறு விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

22. சொற்பதங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணை விதிகளில்,

"அனுமதிப்பத்திரதாரி" என்பது இந்தத் துணைவிதியின் கீழ் தொழில் முயற்சியை நடத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் ஒருவரையும்,

"நபர்" என்பது, கூட்டுச்சேர்க்கப்பட்ட அல்லது அவ்வாறு செய்யப்படாத ஆட்கள் குழுவையும்

"நிர்வாகப் பொறுப்பாளர்" என்பது, பொறுப்பாளர், பாதுகாப்பாளர், சொத்துக்களைப் பாதுகாப்பவர், முகாமையாளர், அல்லது ஏதேனும் ஒருவருக்காகக் குறித்த ஒரு தொழில் முயற்சியின் ஏற்பாடு, நிர்வாகம் அல்லது முகாமை சாட்டப்பட்டுள்ள ஒருவரையும்,

"சபை" என்பது, பாத்தஹேவாஹெற்ற பிரதேச சபையையும்.

"தலைவர்" என்பது, பாத்தஹேவாஹெற்ற பிரதேச சபையின் தலைவரையும்.

"செயலாளர்" என்பது பாத்தஹேவாஹெற்ற பிரதேச சபையின் செயலாளரையும்

"பிரதேச சபைப் பிரதேசம்" என்பது, பாத்தஹேவாஹெற்ற பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட எல்லையையும்,

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலர்" என்பது தலைவரால் இந்தத் துணைவிதிகளைச் செயற்படுத்துவதற்கென அதிகாரம் வழங்கியுள்ள அலுவலர் அல்லது அலுவலர்களையும் குறிப்பிடும்.

***அட்டவணை - 01***

***பீடைதரும் தொழில் முயற்சிகள்:***

1. உரம் அல்லது இரசாயனப் பசளை வகையை உற்பத்தி செய்வது அல்லது களஞ்சியப்படுத்தி வைப்பது
2. தோல் பதனிடுதல்
3. தோல் விற்பனை செய்வது
4. கால்நடை வளர்ப்பு (இறைச்சிக்காக, பாலுக்காக, முட்டைக்காக)
5. புகைப்பட நிலையமொன்றை நடத்துதல்.
6. கால்நடை மருந்தகம் நடத்துதல்
7. விற்பனைக்காகப் பழுதடைய இடமுள்ள உணவுவகைகளையோ அல்லது உணவுப்பொருட்களையோ களஞ்சியப்படுத்தி வைத்தல்.
8. கருவாடு, உப்புமீன் அல்லது ஜாடி 150 கிலோ கிராமை விட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
9. சிரட்டைக்கரி அல்லது விறகுக்கரி தயாரித்தல் அல்லது கரியைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
10. புகையிலை பதப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்துதல்
11. விலங்குணவு உற்பத்தியும் விலங்குணவுக் களஞ்சியமும் நடத்துதல்
12. புண்ணாக்கு தயாரிப்பு அல்லது 200 கிலோ கிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
13. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்
14. விலங்குகளின் எலும்பு அரைப்பது அல்லது வைத்திருப்பது
15. புதிய அல்லது பழைய உலோகங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்
16. உலோகக் கழிவுப்பொருட்களின் களஞ்சியம் நடத்துதல்
17. வீட்டுத் தளபாட உற்பத்தியும் களஞ்சியமும் நடத்துதல்
18. பிரம்புப் பொருட்கள் தயாரிப்பு
19. தச்சுத் தொழிற்கூடம் நடத்துவது
20. பழப்பாகு அல்லது பானம் தயாரித்தல்
21. இனிப்பு வகைகள் தயாரித்தல்
22. தென்னை மட்டையை ஊறவைத்தல் (அவியச் செய்தல்)
23. தூரிகை தயாரித்தல் (பற்தூரிகை தவிர்ந்த)
24. பற்தூரிகை உற்பத்தி
25. கள் வடித்தல்
26. வினாகிரித் தயாரிப்பும் களஞ்சியமும்
27. பொறிமுறையினாலோ அல்லது கையினாலோ மரம் கிழிக்கும் நிலையம் நடத்துதல்
28. அச்சு மை, பூச்சு மை, வார்ணிஷ் அல்லது டிஸ்டெம்பர் சாயம் அல்லது 100 இலீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்
29. சோடா உற்பத்தி
30. தோல்பொருட்கள் தயாரிப்பு
31. பழவகை, மீன் அல்லது ஏனைய உணவுவகைகளைத் தகரத்தில் அடைத்தல்
32. மிளகாய், கோப்பி, தானியங்கள், அவரைப்பயிர்கள், கறிச்சரக்குப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் ஆலையை நடத்துதல்
33. மெழுகுதிரி உற்பத்தி செய்தல்
34. கற்பூர உற்பத்தி
35. எழுத்துமை, அச்சுமை, ஸ்டென்சில் மை தயாரிப்பு
36. ஆடை கழுவும் நீலத் தயாரிப்பு
37. அரக்கு உற்பத்தி
38. வாசனைத் திரவியங்களின் உற்பத்தியும் களஞ்சியமும்
39. பாடசாலை வெண்கட்டித் தயாரிப்பு
40. டயர் அல்லது டியூப் 30 இலும் அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
41. டயர் மீள நிரப்புதல்
42. டயர், டியூப் வொல்கனைசுப்படுத்தும் நிலையம் நடத்துதல்
43. 1000 கிலோ கிராமுக்கு அதிகமாகச் சீமெந்து களஞ்சியம் நடத்துதல்
44. சீமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டோஸ் சீமெந்துப் பொருட்கள் தயாரித்தல்
45. பிளாத்திக் பொருட்கள் உற்பத்தி
46. விசைத்தறி நிலையம் நடத்துதல்
47. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இட்டுவைத்த கோணிப்பைகளைச் சுத்தமாக்கி விற்பனை செய்தல்
48. பொறிமுறையில் சீமெந்து அச்சுக்கல் தயாரித்தல்
49. தானியங்கள் அல்லது அவரை இனங்களில் 250 கிலோ கிராமைவிட அதிக அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்.

### *அட்டவணை - 02*

***அபாயகரமான தொழில் முயற்சிகள்:***

1. மொத்த வியாபாரத்துக்கென மா, உப்பு, சீனி , என்பவற்றை 750 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
2. தைத்த ஆடைகள் தயாரிப்பு
3. அச்சகம் ஒன்றை நடாத்துதல்
4. 100 இற்கு மேற்பட்ட கோழிகளைக் கொண்டுள்ள கோழிக்கூடு அல்லது கோழிப்பண்ணை நடத்துதல்.
5. 10 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஆடு, பன்றிக் கொட்டில் அல்லது பண்ணையை நடத்துதல்.
6. செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்தி வைத்தல்.
7. விறகுக் களஞ்சியம் நடத்துதல்.
8. இயந்திரத்தினால் அல்லது கையினால் கருங்கல் அகழ்தல் அல்லது உடைத்தல்
9. குளிர்பான உற்பத்தி அல்லது 100 இற்கும் மேற்பட்ட குளிர்பான போத்தல்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
10. ஐஸ்கிரீம் தயாரிப்பு
11. தேங்காயெண்ணெய்த் தயாரிப்பு அல்லது 300 இலீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்.
12. தீப்பெட்டி உற்பத்தி
13. தும்பு அல்லது ஏனைய நார்களால் பொருட்கள் செய்வதும் களஞ்சியப்படுத்துதலும்
14. பாவிக்கப்பட்ட உடுதுணை வகைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்.
15. தங்க நகை தயாரிப்பும் திருத்த வேலையும்
16. பொறிமுறை மரம் அரிதல்
17. பொறிமுறைப் பட்டறை வேலைத்தளம் நடத்துதல்
18. வெற்றுக் கோணிப்பை, வெற்றுப்போத்தல் களஞ்சியம் நடத்துதல்.
19. மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலைத்தலம்.
20. பழைய பேப்பர் களஞ்சியம் நடத்துதல்
21. விசிறும் சாயம் - ஸ்பிறே பெயிண்டிங் - பூசும் நிலையம் நடத்துதல்.
22. வாணவேடிக்கை மற்றும் பட்டாசுக் களஞ்சியம் நடத்துதல் அல்லது தயாரித்தல்
23. தேங்காயெண்ணெய் தவிர ஏனைய காய்கறி எண்ணெய் 50 இலீற்றரைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்துதல்.
24. குளிரூட்டிய இறைச்சி, மீன் வகைகளை களஞ்சியம் நடத்துதல்.
25. அரிமரக் களஞ்சியம் நடத்துதல்.

### *அட்டவணை - 03*

***பீடைதரும் மற்றும் அபாயகரமான தொழில் முயற்சிகள்:***

1. இரசாயனங்களைப் பயன்படுத்தி கறுவா, ஏலம், கராம்பு அல்லது நார் வகைகளைப் பதப்படுத்துதல்.
2. சாயமூட்டுதல் அல்லது உலர் சலவை செய்தல்.
3. துணி அச்சிடுதலும் சாயமூட்டுதலும்
4. மின்னியல் முலாம் பூசும் நிலையம் நடத்துதல்
5. சுண்ணக்கல் அல்லது முருகைக்கல் சுடுதல், தயாரித்தல் அல்லது நீற்றுச் சுண்ணக் களஞ்சியம் நடத்துதல்.
6. பற்றரி மின்னேற்றம் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் நிலையம்.

**அட்டவணை - 03** *(தொடர்ச்சி)*

7. மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்தல்
8. மோட்டார் வாகனம் சேர்விஸ் பராமரிப்பு நிலையம் நடத்துதல்.
9. தகர வேலைத்தலம் நடத்துதல்.
10. திரவவாயுக் கொள்கலன் களஞ்சியம் நடத்துதல்.
11. ஆயுர்வேத மருந்து, தேசிய மருந்துகள் தயாரிப்பு அல்லது கலவை செய்தல்
12. கண்ணாடியும் கண்ணாடித் தகடும் களஞ்சியப்படுத்துதல்
13. பிளாத்திக் அல்லது கண்ணாடியிழைத் தொழிற்சாலை நடத்துதல்.
14. 150 கிலோகிராமை விட அதிகமாக தேயிலைக் களஞ்சியப்படுத்தி வைத்துக்கொள்ளல்.
15. காய்ச்சி ஒட்டும் வேல்டிங் பட்டறை நடத்துதல்
16. கடைசல் பட்டறை நடத்துதல்
17. பெற்றோல்,டீசல் எண்ணெய் அல்லது ஏனைய கனியநெய் வகைகளின் களஞ்சியம் ஒன்றை நடாத்துதல்.
18. விவசாய இரசாயனப்பொருட்கள் தயாரிப்பும் களஞ்சியமும்
19. வளிசீராக்கி, குளிரூட்டி, அதிகுளிரூட்டி திருத்தவேலை நிலையம்.
20. மின்னியல் தொழில் அல்லது மின் உபகரணங்கள் தயாரிப்பு அல்லது திருத்தவேலை நிலையம். நடாத்துதல்.
21. பால் குளிரூட்டும் நிலையம் நடத்துதல்.

*12-614/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.